

ஆலங்குடி ஸ்ரீ ஸ்வயம் ப்ரகாசானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்



உ

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்

– ஸ்ரீஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்

स्वयंप्रकाशं मम सुप्रकाशं ह्याकाशसाम्यं गतमप्रमेयं ।
काषायदण्डोज्वलितोर्ध्वपुण्ड्रं स्वाचार्यवर्यं शरणं प्रपद्ये ।।

நீர்வளம், நிலவளம் பொருந்திய சோழ நாட்டில் ஆலங்குடி என்னும் கிராமத்தில் நாராயணய்யர் என்னும் ப்ராம்மணோத்தமர் இருந்து வந்தார். அவர் மிகவும் ஏழையானதால் பௌரோஹித்ய வ்ருத்தியை நடத்துபவராகவும், வேதம் பூர்ணமாய் அத்யயனம் செய்தவராகவும், ஸகல ஸத்குணங்களும் நிரம்பியவராகவும் இருந்தார். தர்ம சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட ஆன்ஹிகப்படி க்ருஹஸ்த தர்மங்களை நடத்துபவராகவும் கோபால கிருஷ்ணனிடம் அளவு கடந்து பக்தி உடையவராகவும் இருந்து வந்தார். அவருக்கு வெகுகாலம் புத்ரனில்லாம லிருந்து பிறகு வேணுகோபால கிருஷ்ண ஸ்வாமிகள் அனுக்ரஹத்தால் ப்ரஹ்லாதாம் சமாக ஒரு புத்ரன் அவதரித்தான்.

அந்த குழந்தைக்கு ராமகிருஷ்ணன் என்னும் பெயரிட்டு மிகவும் செல்லமாக வளர்த்து வந்தனர். ராமகிருஷ்ணனுக்கு ஐந்து வயதில் அக்ஷராப்யாஸம், ஏழாவது வயதில் உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்கள் யதோக்தமாக நடந்து ஒரு மஹா பண்டிதரிடம் வித்யாப்யாஸத்திற்காக ஒப்படைக்கப்பட்டான். பதினாறு வயதிற்குள் வேதத்தை பூர்ணமாக அத்யயனம் செய்து வேதத்தின் அங்கமாகிய சிக்ஷை வ்யாகரணம் எனப்படும் இரண்டு சாஸ்திரங்களில் பாரங்கதனாக ஆனான். இவ்வாறு வித்யையால் மஹாதேஜஸ்வியாய் விளங்கும் ராமகிருஷ்ணனுக்கு விவாஹம் நடத்த பெற்றோர்கள் பெண் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் ராமகிருஷ்ணனுக்கோ குடும்பமாகிய பாழுங்கிணற்றில் விழுந்து விட்டால் ஹரியை ஸ்மரிக்க இடமே இராது என்னும் பயம் உண்டாயிற்று. குடும்ப மாகிய பாழுங்கிணற்றை விட்டு எழுந்திருந்து வனத்திற்கு ஓடி ஹரியை ஆச்ரயிக்க வேண்டியது. இது ஸகல சாஸ்திரங்களுடையவும் ஸாரம் என்று தீர்மானித்து அதற்குரிய காலத்தை எதிர்பார்த்தி ருந்தான்.

இப்படியிருக்க தன்னுடைய ஞானபக்தி வைராக்யத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள குரு கடாக்ஷம் முக்யமென்று கருதி ஒரு தக்க குருவைத் தேடிக் கொண்டிருந்தான். அப்போது ஒருநாள் பாலகிருஷ்ணானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் ராமகிருஷ்ணனின் ஸ்வப்னத்தில் தோன்றி ஸ்ரீ ந்ருஸிம்ம மந்திரத்தை உபதேசித்து ஸ்ரீமத் பாகவதத்தையும் அனுக்ரஹித்துக் கொடுத்து மறைந்தார். அன்று முதல் ராமகிருஷ்ணனின் ஹரி பக்தி உச்சநிலையை அடைய ஆரம்பித்தது. எப்போதும் ஏகாந்தத்திலிருந்து மந்த்ரஜபமும் ஸ்ரீ பாகவத படனமும் செய்வான். மஹாத்மா பாலகிருஷ்ணானந்த ஸரஸ்வதி ஸகலசாஸ்த்ர பாரங்கதர், கோபால பாகவதர் மூலம் ஸ்ரீ குரு ஸ்வாமிகளை தரிசித்து ஸ்ரீ பகவந்நாம போதேந்திர ஸ்வாமிகள் நாமஸித்தாந்த க்ரந்தங்களைப் பார்த்த பிறகு பகவந்நாம ருசி உண்டாகி கோவிந்தபுரத்திலேயே இருந்து வந்தாரல்லவா? அவருக்கு ஸ்ரீமத் பாகவதத்தில்

ருசி மிக அதிகம். கையில் வீணையை மீட்டிக் கொண்டு ஸ்ரீமத் பாகவத ச்லோகங்களை கானம் செய்து மிகவும் மதுரமாக ப்ரவசனம் செய்வார். பக்தர்களை அப்படியே தன்னை மறந்து சொல்லுகிற சரித்திரத்தில் ஊன்றிவிடச் செய்யும் சக்தி அவருக்குண்டு. ஸ்ரீ பால கிருஷ்ணானந்தருடைய அனுக்ரஹத்தினால் ஸ்ரீ ராமகிருஷ்ணன் ஸ்ரீமத் பாகவதத்தில் அளவு கடந்த ப்ரேமையையும் ஞானத்தையும் பெற்றான்.

ஸ்ரீ ராமகிருஷ்ணனுடைய இஷ்டத்திற்கு மீறி பெற்றோர்கள் நற்குணமுடைய ஒரு பெண்ணை பலாத்காரமாக திருமணம் செய்து வைத்தனர். பரம விரக்தனான ராமகிருஷ்ணன் பித்ருவாக்யத்தை மீற இஷ்டமில்லாமல் க்ருஹஸ்தனாக ஆனான். ஆனால் அவன் மனம் இல்வாழ்க்கையாகிய சேற்றில் படிந்து மலினமாகி விடவில்லை. ப்ராக்ருத ஸுகங்களை வெறுத்து நிர்மலமாகவே இருந்தது. பாக்யவதியான இவருடைய பத்னி இவரால் கைபிடிக்கப்பட மட்டும் பாக்யம் செய்தாள் போலும். அவள் குழந்தையானபடியால் இன்னும் வீட்டிற்கு அழைக்கப்படாமல் பித்ரு க்ருஹத்திலேயே இருந்து வந்தாள். தனக்கு ஏற்பட்டுள்ள பந்தத்தைக் கண்டு ராமகிருஷ்ணன் நாள்தோறும் மிகவும் வெறுப்படைந்து வந்தான். ஒருநாள் தன்னை ஒரு காட்டில் பல திருடர்கள் கூடி பலாத்காரமாய்க் கட்ட முயற்சிப்பதாகவும் அப்போது ஒரு சிங்கம் அங்கு கர்ஜித்துக் கொண்டு வரவே திருடர்கள் பாசத்தைப் போட்டு விட்டு ஓடிவிட்டதாகவும் கனவு கண்டான். இதன் பொருள் பந்துக்களாகிய திருடர்களின் கொடுமையிலிருந்த ஸ்ரீ நரஸிம்ம பகவான் கூடிய சீக்கிரம் நம்மைக் காப்பாற்ற போகிறார் என்று தெரிந்து கொண்டான். மறுநாள் பொழுது விடிந்ததும் தன் மனைவி இறந்துவிட்டாள் என்று ஆள் வந்திருப்பதைக் கண்டு அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தான். பிறகு அவளுக்கு தான் செய்ய வேண்டிய க்ரியைகளைச் செய்து முடித்தான்.

பத்னியின் வியோகத்திற்குப் பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ணனின் வைராக்யம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. அதில் லோகஸுகம்யாவும் பஞ்சுபோல் ஆயின. ஸதாகாலமும் தன் இஷ்ட மூர்த்தியான ஸ்ரீப்ரஹ்லாத வரதனின் த்யானத்திலேயே கழிக்கலானான். அவனுடைய தனிமையைக் கண்டு பந்துக்கள் பத்னியைப் பிரிந்த ஏக்கம் என்று நினைத்தனர். எனவே அவனுக்கு கூடிய சீக்கிரம் மறுவிவாஹம் செய்துவைக்கத் திட்டமிட்டனர். ஸ்ரீ ராமகிருஷ்ணன் தனக்கு மற்றொரு விபத்து வந்திருப்பதை உணர்ந்தான். இப்படியிருக்கையில் ஸ்ரீ ராமகிருஷ்ணன் ஒருநாள் விடியற்காலையில் ஸ்ரீ ஸதாசிவ ப்ரும்மேந்த்ராளைப் போல் திடீரென உன்மத்தாவஸ்தையை அடைந்தான். தன் இடத்திலிருந்து எழுந்திருந்து யார் கையிலும் பிடிபடாது ஓடலானான்.

தனது இருபத்தெட்டாவது வயதில் இவ்வாறு அவதூதராகக் கிளம்பிய ஸ்வாமிகள் ஸதாகாலமும் லோக விலக்ஷணமாகவே இருந்து வந்தார். அவருடைய உபவீதம் வஸ்திரம் எல்லாம் சரீரத்தை விட்டு விலகின. எப்போதும் லோக ப்ரக்ஞையில்லாது ஜடனைப் போலும் மூகனைப் போலும் க்ரஹக்ரஸ்தனைப் போலும் உன்மத்தனாகத் திரிவார். அவருடைய சிரஸில் கேசங்கள் ஜடையாகத் தொங்கும். சரீரமாத்யந்தம் மலினமாக இருக்கும். மனமோ ஸ்திரீ புருஷ பேதத்தை ஒழித்து நிர்மலமாக இருக்கும். ஸதாகாலமும் மௌனம் அல்லது நாராயண ஸ்மரணம், ஒருகால் ஆடுவார், ஒருகால் பாடுவார், ஒருகால் அழுவார், ஒருகால் அலற்றுவார். எங்கேயாவது யாரேனும் பகவத் விஷயம் நடத்தினால் அங்குபோய் உட்கார்ந்து ச்ரவணம் செய்வார். ஆனால் இரண்டு வார்த்தைகள் ச்ரவணம் செய்ததும் தன்னை மீறி ஆடவும் பாடவும் அழவும் ஆரம்பித்து விடுவார். மேனியெல்லாம் சிலிர்த்திருக்கும். உச்சஸ்வரத்தில் “நாராயண” “நாராயண” என்று கானம் செய்வார். கண்களில் தாரை தாரையாக நீர் பெருகும். சில சமயம் கூச்சலிடுவார். சில சமயம் மூர்ச்சையாகி விடுவார்.

# ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகளைப் பற்றி சில விபரங்கள்

ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ பாராயணம் பிரவசனம் நடக்காத ஊரில் அவர் தங்க மாட்டார். பிக்ஷையை முன்னிட்டு வைத்துக் கொண்டிருப்பதாக ஒரு மனிதர் சொன்னதைக் கேள்விப்பட்டு அன்றிலிருந்து மூன்று வருஷங்கள் அன்ன பிக்ஷை இல்லாமல் இருந்தார்.

கிருஹஸ்தர்கள் பிக்ஷை கொண்டுவரும் போது அந்த பாத்திரத்தை இடுப்புக்கு கீழ் எடுத்து வந்ததாக தெரிந்தால் அந்த பிஷையை ஏற்க மாட்டார். பகவத் பூஜைக்காகவும் மஹான்களுக்காகவும் எடுத்துக்கொண்டு போகிற சாமான்களை இடுப்புக்கு மேல் தான் தூக்கிச் செல்ல வேண்டும் என்கிற தர்ம சாஸ்திரத்தை அனுஷ்டித்து வந்தார்.

ஒருசமயம் காமகோடி ஸ்ரீ பெரியவாள் ஒரு இருட்டு அறையில் காலை நீட்டிக்கொண்டு படுத்துக் கொண்டிருந்தார். அவர் வெளிச்சம் வந்த பிறகு பார்த்தபோது தனக்கு எதிரில் ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகள் படம் இருப்பதைப் பார்த்து காலை மடக்கிக் கொண்டு ஒரு சன்னயாசி எப்படி இருக்க வேண்டுமோ அப்படியிருந்து கொண்டு சன்னியாசி தர்மத்தை முற்றிலும் அனுஷ்டித்த மஹான் ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகள் என்று பக்கத்தில் உள்ளவர்களிடம் சொன்னார்.

தன் கிருஹத்தில் உள்ள தினப்படி பூஜையை தானே (கிரஹஸ்தனே) செய்வதுதான் சிரேஷ்டம் என்பதை புரிய வைக்க அம்பரீஷ சரித்திரத்தின் போது உபன்யாசத்தில் சக்ரவர்த்தி அசட்டு அம்பரீஷன் அரண்மனையில் பூஜா கிரஹத்தை சுத்தம் செய்து கொள்ளுவதிலிருந்து எல்லா காரியங்களையும் தானே செய்துகொண்டு  பூஜையும் மிக சிரத்தையுடன் தினம் செய்து வந்தான் என்று ஜனங்களுக்கு சொல்லுவார்.



ஸ்ரீமத் பாகவத ப்ரவசன மண்டபத்தில் எழுந்தருளியுள்ள அனுக்ரஹ மூர்த்தி

ஸ்ரீ ப்ரஹ்லாதப் ப்ரியன்

இவ்வாறு ஸஞ்சரித்துக் கொண்டு வருகையில் பரமபாகவதர்களின் பாத தூளியால் பாவனமான திருவிசலூர் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அந்த கிராமத்தில் ஸகல சாஸ்த்ர பாரங்கதராய் ஜகத் ப்ரக்யாதி பெற்றவராய் பண்டிதர்களின் கர்வத்தை அடக்கும் பண்டித்ய கர்வமுடையவராய் தனக்கு நிகரான வேறு பண்டிதரில்லாவராய் விளங்கும் ஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகள் என்னும் பெரியவர் இருந்து வந்தார். அவருக்கு ஸ்ரீமத் பாகவதத்தில் சில ஸந்தேஹமும் அதனால் அந்த க்ரந்தத்தில் அலக்ஷியமும் இருந்து வந்தது. ஸ்வாமிகளிடம் ஒரே தடவை ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டதும் அவருக்கு பாகவதத்தில் நம்பிக்கையும் ருசியும் பிறந்தது.

ஒரு நாளைக்கு மேல் எங்கும் தங்காமல் கோதோஹன கால மாத்ரம் ஒரு வீட்டு வாசலில் நின்று கரத்தை ஏந்தி மாதுகரம் வாங்கி சரீர நிர்வாஹம் செய்து கொள்வார். இல்லாவிடில் பலநாள் ஆஹாரம் ஏதுமில்லாமல் ஸஞ்சரிப்பார். பரமஹம்ஸர்களுக்கு பூமியாகிய படுக்கை இருக்கையில் மெத்தை எதற்கு? கையாகிய உபாதானம் இருக்கையில் தலையணை எதற்கு? அஞ்சலியாகிய பாத்ரமிருக்கையில் வேறு பாத்ரம் எதற்கு? திசையாகிய வஸ்த்ரமிருக்கையில் வெண்பட்டு எதற்கு? மரங்களும் நதிகளும் மலைகளும் பந்துக்களாக இருக்கையில் பந்துக்கள் எதற்கு? பகவான் ரக்ஷகனாக இருக்கையில் பணக்காரன் தயவு எதற்கு? என்று ஸ்ரீசுகர் சொன்னது போல் இந்த மஹான் நிரபேக்ஷகராக இருப்பதால் எவரையும் லக்ஷியம் செய்யாது ஸ்வந்த்ரமாக ஸஞ்சரித்தார்.

இவ்வாறு இவர் ஸஞ்சரித்து வருகையில் தன்னுடைய மௌனத்தில் இவருக்கு வெறுப்புண்டாயிற்று. ஸ்ரீ சுகரைப் போலத் தானும் பாகவதம் சொல்ல வேண்டுமென்னும் ஆசை உண்டாகியது. அதற்குத் தகுந்த இடத்தைத் தேடிக்கொண்டு காமாக்ஷிபுரம் என்னும் கிராமத்திற்கு மாலைப்பொழுதில் அவதூதராகவே வந்து சேர்ந்தார். சுவாமிகளைக் கண்டதும் பஞ்சநாதய்யர் என்பவர் வெகு ச்ரத்தையுடன் வரவேற்று வந்தனாதி உபசாரங்கள் செய்தார். அங்கு வந்து வந்தனம் செய்த சிலபேரைப் பார்த்து "நாம் இங்கு பிக்ஷைக்கு வரவில்லை. பாகவதம் சொல்ல வேண்டுமென்னும் ஆசையோடு வந்திருக்கிறேன். யாராவது ச்ரத்தையாக ச்ரவணம் செய்கிறீர்களா?" என்றார். அதற்கு சிலர் வந்தனம் செய்துவிட்டு எங்கள் பாக்யத்தாலேயே தாங்கள் இவ்வளவு தூரம் தேடிவந்து அனுக்ரஹிக்கிறீர்கள். நாங்கள் ச்ரவணம் செய்ய ஸன்னத்தமாக இருக்கிறோம். ஆனால் எங்களிற் சிலர் தாங்கள் திகம்பரராய் இருப்பதைக் கண்டு தரிசிக்க வெட்கப்படுகின்றனர். தங்களுக்குப் பக்குவமிருந்தாலும் எங்களுக்குப் பக்குவமில்லாதபடியால் பாகவத ச்ரவணம் செய்ய ஆசை இருந்தும் தாங்கள் திகம்பரராயிருப்பதால் எங்களுக்கு ஸங்கோஜமாக இருக்கிறது என்றனர்.

இதைக் கேட்ட சுவாமிகள் வியப்படைந்து நாம் அவதூதனாயிருப்பதால் பாகவத ப்ரவசன ச்ரவணாதிகளுக்கு இடையூறாக இருக்குமானால் இன்று முதல் நியமாச்ரமத்தை அடைந்து விடுகிறோம் என்று சொன்னார். இதைக் கேட்டு ஸகல க்ராமஸ்தர்களும் ஆச்சரியப்பட்டனர். உடனே ஸ்வாமிகள் அங்கிருந்து புறப்பட்டு பனங்குடி சுவாமிகள் என்பவரை குருவாக அடைந்து விதிப்படி ஆச்ரமஸ்வீகாரம் செய்து கொண்டார். லோகத்தில் ஒரு குருவையும் ஆச்ரயிக்காமல் பிரஹ்லாதனைப் போல் அவ்யக்தமான குருவைக் கொண்டே ஸ்வாமிகள் பூர்ணராகியிருந்தபடியால் இவர் தானாகவே ப்ரகாசிக்கும் தீபம் போன்றவர் என்று உணர்ந்து பனங்குடி ஸ்வாமிகள் இவருக்கு ''ஸ்வயம் ப்ரகாசானந்த ஸரஸ்வதி'' என்னும் தீக்ஷா நாமத்தை சூட்டினார்.

ஸ்ரீ நாராயணானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்பவர் பரமவிரக்தரும் பரமசாந்தரும் ப்ரகாண்ட வேதாந்த பண்டிதரும் மஹா கிருஷ்ண பக்தரும் ஸ்ரீமத் பாகவத ப்ரவசன கர்த்தாவுமாக ப்ரகாசித்து வந்தார். அவர் ஓரிடத்தில் பிக்ஷை செய்து கொண்டிருக்கையில் அந்த வீட்டிற்குள் யதேச்சையாக ஒரு நாய் புகுந்துவிடவே அதைக் கண்டுவிட்ட அந்த க்ருஹஸ்தர் தடிகொண்டு நாயை விரட்டினாராம். உடனே நாராயணானந்தரும் எழுந்திருந்து

ஓடினாராம். அந்த க்ருஹஸ்தர் வந்து ஸேவித்து விட்டு ப்ரார்த்திக்கும் போது தனக்கும் அந்த நாய்க்கும் சரீரம் ப்ராக்ருதமானது. ஆத்மா பரமாத்மாவின் அம்சமானது. எனவே எந்த விதத்திலும் பேதமில்லை. என்னையே அப்படி தடி கொண்டு துரத்தலாம் என்றாராம். இப்பேர்ப்பட்ட மஹாத்மாவிற்கு ஆறு சிஷ்யர்கள் இருந்தனர். அவர்களுள் மன்னார்குடி ராஜு சாஸ்திரிகள், ஸ்ரீ பாலகிருஷ்ணானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ கோபாலானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் இவர்கள் மிகவும் ப்ரஸித்தர்கள். ஸ்ரீ கோபாலானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ கிருஷ்ணபக்தர், ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம் செய்வார். ஸ்ரீ கோபாலானந்த ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ ப்ரகாசானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் சிஷ்யர். இவருக்கு பனங்குடி ஸ்வாமிகள் சிஷ்யர். பனங்குடி ஸ்வாமிகள் ஸ்ரீ ஸ்வயம் ப்ரகாசானந்த ஸ்வாமிகள் எனப்படும் ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகளின் குரு.

தன்னுடைய அவதூதாச்ரமம் ஸ்ரீமத் பாகவத் ப்ரவசனத்திற்கு விரோதமாக இருக்கிறது என்பதற்காக பக்குவமில்லாத ஜனங்களுக்குக் கூட பாகவதம் சொல்லும் கருணையால் தன்னுடைய நியமாதீத நிலையிலிருந்து ஸ்வாமிகள் நியம ஸன்யாஸத்தை யடைந்து அன்று முதல் தண்ட கமண்டலு காஷாயாம்பரதாரியாய் லலாடத்தில் கோபீ சந்தன ஊர்த்வ புண்ட்ரத்துடன் ஸதாகாலமும் பாகவதபடன ப்ரவசனாதிகளை நடத்திக் கொண்டு பல நியமங்களுடன் தன் ஆச்ரமத்தை நடத்தி வரலானார். லோக ப்ரஞையை முன்னிட்டு பல நியமங்களுடன் ஆச்ரம தர்மம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதெல்லாவற்றிற்கும் காரணம் ஹரிகுணமேயன்றோ?

ஆத்மாராமர்களின் உள்ளத்தை ஆகர்ஷித்து தன் சரித்ரத்தைப் பாட வைப்பது பகவானின் லீலா விசேஷமன்றோ? ஸாக்ஷாத் ஸ்ரீசுகாசார்யருக்கு ஸமமாக ஆத்மா ராமராய் திரிந்து கொண்டிருந்த ஸ்வாமிகள் ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம் செய்தாரெனில் எவ்வளவு மதுரமாகவும் அற்புதமாகவும் இருந்திருக்குமென்று நினைத்துப் பார்ப்போம். ஸ்வாமிகளிடம் பாகவத ச்ரவணம் செய்த ஜனங்களின் பாக்யமே பாக்யம்.

ஸ்ரீசுகர் பரீக்ஷித்தைப் பார்த்து எப்பொழுதும் நிர்குணமான ப்ரும்மானந்தத்திலேயே லயித்து ஜட மூக பதிர க்ரஹக்ரஸ்த பாலகர்களைப் போல் ஸஞ்சரித்த நான் பகவத் குணங்களால் ஆகர்ஷிக்கப்பட்டு இந்த ஸ்ரீமத் பாகவதத்தை அத்யயனம் செய்தேன் என்று சொன்னது போல் ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகளும் கொஞ்சநாள் லோகவேதாதீதமாக பரமஹம்ஸாச்ரமத்தில் திரிந்துவிட்டு இப்பொழுது ஸ்ரீ பாகவதத்திலுள்ள ருசியினால் நியம ஸன்யாஸத்தையடைந்து மிகவும் ப்ரிச்ரமத்துடன் ஸன்யாஸ தர்மத்தை ரஷித்துக் கொண்டு கிராமம் கிராமமாக ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம் நடத்திக் கொண்டு வரலானார். ஆலங்குடி ஸ்வாமிகள் மிகவும் ஸஹிப்புத் தன்மையும் பொறுமையும் தயையும் உடையவர். அவருக்கு காம க்ரோதங்கள் லவலேசமும் கிடையாது. எப்பொழுதும் பல நியமங்களை அனுஷ்டித்தார். அவைகளுள் த்ரிகால ஸ்னானம், ஆஹாரநியமம் இவை முக்கியமானவை. சில சமயம் தேங்காயைத் திருகி அதை சாப்பிட்டு விட்டு மாதக் கணக்காக இருந்து விடுவார். சில சமயம் வில்வப் பழம் மட்டும் சாப்பிட்டுவிட்டு இருப்பார். சில சமயம் க்ஷீரப்ராசனம் மட்டும் செய்துகொண்டு மாதக் கணக்கில் இருப்பார். சில சமயம் சத்துமா மட்டும் எடுத்துக்கொண்டு இருந்து விடுவார்.

இவ்வாறு அவருடைய வாழ்க்கை மிகவும் ஸூக்ஷ்மாஹாரத்துடனேயே நடந்து வந்தது. எப்பொழுதும் பல குழந்தைகளுடன் கூடி விளையாடிக் கொண்டிருப்பார். குளம் இல்லாத ஊர்களில் அக்ரஹாரத்திலுள்ள வாலிபர்களைக் கூட்டிக் கொண்டு குளம் வெட்டி விடுவார். தோட்டம் அமைப்பதிலும் கோயில்களில் உத்ஸவம் நடத்துவதிலும் இவருக்கு மிகவும் விருப்பமதிகம். எப்போதும் கிராமத்திற்கு வெளிப்புறமான தோட்டத்திலோ, மடத்திலோ, கோயிலிலோதான் தங்குவார். அனேகமாய் கௌபீனம் தவிர மற்ற வஸ்திரம் உடுத்துவதில்லை. ஸ்ரீமத் பாகவதத்தில் கூறியிருக்கிறபடி ஆச்ரம தர்மங்களை ரக்ஷித்து வருவார். பிறரை அவரவர்களுடைய தர்மங்களை ரக்ஷித்து வரும்படி வற்புறுத்துவார். எந்த காரணத்தைக் கொண்டும் காசைக் கையால் தொடமாட்டார்.

எந்த ஊரிலிருந்து அவரை அழைக்க வந்திருந்தாலும் உங்கள் ஊரில் தங்கினால் ஸப்தாஹம் நடத்த முடியுமா? இல்லாவிடில் பிக்ஷைக்காக வேண்டி உங்கள் கிராமத்திற்கு வரமாட்டேன் என்பார். ஆலங்குடி ஸ்வாமிகள் அடிக்கடி சில ஊர்களுக்கு வழக்கமாக போவதுண்டு. அந்த ஊர்களில் பல ஸப்தாஹங்கள் நடத்தியிருக்கிறார். இன்னும் அந்த ஊர்களில் ஜனங்களுக்கு பாகவத ஸப்தாஹத்தில் ருசியும், கிருஷ்ண பக்தியும் இருந்து வருகிறது. அவைகளுள் காமாக்ஷிபுரம், வடரங்கம், திட்டச்சேரி, மரத்துறை, வேப்பத்தூர், கோடிமங்கலம், அரயபுரம், மாயவரம், தப்ளாம்புலியூர், அரசவனங்காடு, கோனேரிராஜபுரம், ஆனந்ததாண்டவபுரம், ஸ்ரீகண்டபுரம், பாலயூர், காளியாகுடி, பாவட்டக்குடி, விஷ்ணுபுரம், தேதியூர், பரவக்கரை, தூத்துக்குடி, கூத்தனூர், ஸ்ரீராமாபுரம், மேலப்பாலயூர், ராதாமங்கலம், சிருகாமணி முதலிய ஊர்கள் முக்கியமானவை. இந்த ஊர்களில் இன்னும் பல சிஷ்யர்கள் ஸ்வாமிகளிடம் பாகவதம் கேட்டதை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த கிராமங்கள் ஸ்வாமிகளுடைய வாஸத்தினால் மிகவும் புனிதமாக இருந்து வந்தன. ஆபால வ்ருத்தர்கள் யாவரும் தர்ம நிஷ்டர்களாகவும் பகவத் பக்தர்களாகவும் இருந்து வந்தனர். ஸ்வாமிகளுடைய ஸங்கத்தினால் பல பேர்கள் தினம் கீதா பாகவத பாராயணம் செய்பவர்களாகவும் பல பேர் நாம கீர்த்தன பரர்பளாகவும் இருந்து வந்தனர். ஸ்வாமிகள் ஸஞ்சரித்த எந்த ஊரிலும் எந்த க்ருஹத்திலும் ஸ்த்ரீ பாலகர்களுக்குக் கூட பாகவத ச்லோகங்கள் மனப்பாடமாகியிருக்கும். ஸ்ரீமத் பாகவதத்தினுடைய ஸ்ரீதரீய வ்யாக்யானத்தில் ஸ்வாமிகளுக்கு மிகவும் ப்ரியமதிகம். எந்த ப்ரவசனத்திலும் ப்ரதிச்லோகம் ஸ்ரீதரீயம் சொல்லாமலிருக்க மாட்டார். கோதண்டராமய்யர் என்னும் க்ருஹஸ்தர் ஸ்வாமிகளுக்கு அத்யந்த ப்ரிய சிஷ்யர். அவர் ஸ்வாமிகளின் ஸப்தாஹங்களில் மூலபாராயணம் செய்வார். இதைத் தவிர ஸ்வாமிகளுக்கு ஆயுர்வேதம், மந்த்ர சாஸ்திரம் இவைகளிலும் நல்ல பரிச்சயமிருந்தது. ஆனால் அவைகளில் ஸ்வாமிகள் ப்ரவ்ருத்திக்க மாட்டார். மிகவும் அவசியமாகி விட்டால் சிஷ்யர்கள் மூலமாக யாருக்காவது உபகாரம் செய்வார்.

உதாரணமாக ஆனந்த தாண்டவபுரத்தில் பட்டாபி ராமய்யர் என்னும் ஸ்வாமிகளுடைய சிஷ்யர் வீட்டில் யாரோ பில்லிசூன்யம் வைத்து விட்டனர். அதனார் அவருக்கு மிகவும் ச்ரம மேற்பட்டது. இவ்விஷயம் ஸ்வாமிகளின் காதில் பட்டதும் கருணையால் மிகவும் மனந்துக்கித்து ஸ்ரீ கோதண்டராமய்யரை விட்டு பட்டாபி ராமய்யருக்கு ந்ருஸிம்ம மந்த்ரத்தை உபதேசிக்கச் சொன்னார். இதன் மூலம் அந்த ஆபிசாரபாதை நீங்கியது. இவ்வாறு ஸ்வாமிகள் பல போர்களுக்கு ஆபத்துக் காலத்தில் கைகொடுத்து உதவி செய்துள்ளார். ஆனால் இதுமாதிரி விஷயங்கள் ஸ்வாமிகளால் நேரிடையாக தானே கவனிக்க முடியாது. ஒவ்வொரு ஸப்தாஹத்திலும் பரவசனம் முடிந்ததும் விடிய விடிய திவ்ய நாம கீர்த்தனம் நடைபெறும். ஸ்வாமிகள் அதில் கலந்துகொண்டு இரவு பூராவும் ச்ரவணம் செய்து பரமானந்தமடைவார். பிறகு மறுநாள் முதல் நாள் கண் விழித்த ச்ரமத்தை லக்ஷியம் செய்யாமல் ப்ரவசனம் செய்வார். இவ்வளவு அதிசயமான குணங்களாலும், பக்தி விசே-ஷத்தினாலும் ஸம்ஸாரிகளுக்கு மிகவும் ஆதரவாக இருந்தார்.

ஒரு சமயம் திட்டச்சேரி என்னும் கிராமத்தில் ஸ்வாமிகள் ஸப்தாஹம் நடத்தினார். பல பக்தர்கள் ச்ரவணம் செய்து தங்களை பாக்யவான்களாக கருதினார்கள். தினந்தோறும் வழக்கம் போல் நாமகீர்த்தனமும் நடந்து வந்தது. ஸ்வாமிகள் எப்போதும் கஜேந்திர மோக்ஷத்தையும் ப்ரஹ்லாத சரித்ரத்தையும், மிகவும் அனுபவித்துச் சொல்லுவார். அன்று கஜேந்திர மோஷம் அற்புதமாக அமைந்தது. ஸ்வாமிகள், ஸாக்ஷாத் நாராயணனே பரதைவம். மற்ற தேவதைகள் நாராயணனுக்கு கீழ்ப்பட்டவர்களே. ஏனெனில் கஜேந்திரனுடைய நிர்விசேஷமான ஸ்தோத்ரத்தைக் கேட்டு தேவதைகள் கஜேந்திரனை ரக்ஷிக்க முன்வரவில்லை. ஏனெனில் ஆதிகாரணம் எதுவோ அதுவந்து என்னை ரக்ஷிக்கட்டும்

என்று சொல்லவே ஸமஸ்த தேவதைகளும் தங்களுக்கு ச்ருஷ்டி உண்டென்றும் தங்களை ச்ருஷ்டித்தவன் ஒருவன் உண்டென்றும் அவனே இந்த ஸ்தோத்ரத்திற்கு ப்ரதிபாத்யன் என்றும் நினைத்து கஜேந்த்ரனுடன் தாங்களும் கூடி அந்தப் பரமாத்வாவைத் துதிக்கலாயினர். அப்பொழுது வாஸுதேவனே கருடாரூடனாய் சக்ரபாணியாய் வந்து கஜேந்த்ரனை ரக்ஷித்தான். எனவே ஸ்ரீ ஹரியே பரதைவம் என்று இந்த உபாக்யானத்தில் ஸித்தாந்தமாகிறது என்று உபன்யஸித்தார்.

அப்பொழுது ஒரு பண்டிதன் ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வொரு தேவதை பரதெய்வமாக புகழ்ந்திருக்கிறது. இந்த கஜேந்த்ரமோக்ஷம் ஹரிபரத்துவம் சொல்ல வேண்டி கல்பிதமான கதையே தவிர சிவ விஷ்ணு பேதம் சொல்கிற கதைகளுக்கு ப்ரதானம் கொடுக்கக் கூடாது. ஏனெனில் அதுமாதிரி கதைகள் அர்த்த வாதம் என்றான். அதற்கு ஸ்வாமிகள் மனம் நொந்து உம்மைப் போன்ற ஆஸாமிகளுக்கு ஸ்ரீமத் பாகவதத்தில் ச்ரத்தை வருவது கடினம். பகவானாக க்ருபை செய்து உம்முடைய புத்தியைத் தெளியவைத்தாலொழிய என் உபதேசங்களால் பயனொன்றுமில்லை என்றார். தவறிச் சொல்லி விட்டேனென்று ஒப்புக் கொள்ளுமே. நீர் ஸ்மார்த்த ஸன்யாஸியாக இருந்து கொண்டு ஸகல தேவதா ஸாம்யம் கூறாமல் ஏன் வைஷ்ணவ ஸன்யாஸியைப் போல் ஏக பக்ஷமாய்க் கூறுகிறீர் என்றான் பண்டிதன். ஸ்ரீமத் பாகவதத்தில் எது ஸித்தாந்த மாகிறதோ அதைச் சொன்னேன். அன்யதாவாக சொல்லியிருந்தாலல்லவோ தவறிச் சொல்லி விட்டேன் என்பதற்கு என்று சொன்னார். அந்தப் பண்டிதன் ஸ்வாமிகளை அலக்ஷியமாய் நினைத்துக் கொண்டு போய்விட்டான்.

தினந்தோறும் கொள்ளிடம் நதியின் சிற்றாறான ராஜா வாய்க்காலுக்கு விடியற்காலையில் ஸ்வாமிகள் ஸ்னானத்திற்கு போவது வழக்கம். சில சிஷ்யர்களும் கூடவந்திருந்தனர். ஸ்வாமிகள் ஸ்னானம் செய்து கொண்டிருக்கையில் ஒரு முதலை ஸ்வாமிகள் காலைக் கவ்வி விட்டது. உடனே ஸ்வாமிகள் இரு கைகளையும் ஆகாசத்தில் தூக்கி ஹரே ஹரே என்று கத்தினார். உடனே அந்த முதலை ஸ்வாமிகளை விட்டுவிட்டு தண்ணீரில் மறைந்து விட்டது. ஸ்வாமிகளின் காலில் பெரிய காயம் உண்டாகி விட்டது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பண்டிதனுக்கு ஸத்புத்தி உண்டாகியது. உடனே ஸ்வாமிகளின் சரணத்தில் விழுந்து கஜேந்திரமோக்ஷத்தைத் தப்பு என்றும் கல்பனை என்றும் வாதாடினது வீண் கர்வத்தினால் தான், உண்மையில் என் அறியாமையைப் போக்கவே இப்போது யதீந்த்ரமோக்ஷம் நடைபெற்றது என்னை க்ஷமிக்கவும் என்றான். அதற்கு ஸ்வாமிகள் க்ஷமிக்க என்ன இருக்கிறது. நீ இனிமேலாவது ஸ்ரீமந் நாராயணனை பரதைவமாகக் கூறினால் பொறாமைப்படாமல் இரு என்றார். அந்தப் பண்டிதன் பரம பக்தனாக ஆனான்.

ஸ்வாமிகளின் காலில் முதலை வாய்ப்புண் பெரியதாக ஆகிவிட்டது. அதற்கு ஸ்வாமிகளே சிஷ்யர்களின் வேண்டுகோளின் மேல் வைத்யம் செய்து கொண்டார். சில மூலிகைகளைக் கொண்டு ஒரு தைலத்தைக் காய்ச்சி நல்ல சூட்டுடன் அதைப் புண் மேல் விடும்படி சிஷ்யர்களை ஆக்ஞாபித்தார். ஆனால் ஒரு சிஷ்யனும் துணிந்து முன்வரவில்லை. உடனே ஸ்வாமிகள் அசடுகளா! எதற்கு இவ்வளவு பயம்? ஆத்மா வேறு சரீரம் வேறு, என்று உங்களுக்கு எவ்வளவு தரம் சொல்லியிருக்கிறேன். அது வாஸ்தவமானால் இந்த வேதனை ஆத்மாவான எனக்கு ஏது? ஜடமான சரீரத்திற்கும் ஏது? என்று கூறிக்கொண்டே அடுப்பில் கொதித்துக் கொண்டிருக்கும் தைலத்தை அந்தப் புண்ணில் விட்டுவிட்டு கடகடவென்று சிரித்தார். இதைக் கண்ட சிஷ்யர்கள் பக்தியினால் கண் கலங்கினார்கள். பிறகு சில நாட்களில் அந்தப் புண் ஆறிவிட்டது.

ஒரு சமயம் கூத்தனூர்என்னும் கிராமத்தில் அரசலாற்றின் கரையில் ஒரு தோப்பில் ஸ்வாமிகள் ஸப்தாகம் நடத்தினார். அந்தத் தோப்பு நைமிசாரண்யம் போலிருந்தது. ஸ்வாமிகள் ஸுதபௌராணிகர் போலிருந்தார். ச்ரவணம் செய்யும் பக்தர்கள் சௌனகாதிம

கரிஷிகள் போலிருந்தனர். பிற்பகல் மூன்று மணி இருக்கும். நல்ல வெய்யிலடிக்கிறது. அப்பொழுது ஒரு ஸர்ப்பம் அங்கு வந்தது. அந்த ஸர்ப்பத்தை கண்டதும் ச்ரவணம் செய்யும் ஜனங்கள் கலவரப்பட்டு எழுந்தனர். சிலர் அந்த ஸர்ப்பத்தை அடிக்கக் கிளம்பினர். அதற்குள் அந்த ஸர்ப்பம் ஸ்வாமிகள் உட்கார்ந்திருந்த ஆசனப் பலகையின் இடுக்கில் போய்விட்டது. அதற்குள் சிலர் வந்து ஸ்வாமிகளை எழுந்தி ருக்கும்படி சொன்னார்கள். அதற்கு ஸ்வாமிகள் லோகத்தில் ஸகல ஸ்வரூபங்களும் பகவானே என்கிற ஞானம் எப்பொழுது உதிக்கிறதோ அப்பொழுதுதான் அவனுக்கு ஸன்யாஸத்திற்கு உரிமை. என்னுடைய இந்த சரீரத்திற்கும் இந்த ஸர்ப்ப சரீரத்திற்கும் யாதொரு பேதமுமில்லை. இரண்டு சரீரத்திலும் ஆத்மாவாக இருப்பவன் ஸ்ரீ நரஸிம்மனே தான். அப்படியிருக்க பயம் எதற்கு? பேசாமல் உட்கார்ந்து கதை கேளுங்கள் என்றார். எல்லோரும் உட்கார்ந்தனர். ஆனால் ஜனங்களின் உள்ளம் அந்த ஸர்ப்ப விஷய மாகவே இருக்குமல்லவா? ஆகையினால் ஸ்வாமிகள் தன்னுடைய யோக ப்ரபாவத்தால் அவர்களுடைய மனதை தன்னிடம் ஆகர்ஷித்து விட்டார்.

ஜனங்களுக்கு ஸர்ப்பம் வந்ததே மறந்து போய் விட்டது. ப்ரவசனம் முடிந்ததும் ஜனங்களில் ஒருவரைப் பார்த்து இங்கு ஸர்ப்பம் வந்ததே, அது போய் விட்டதா பார் என்று சொல்லிக் கொண்டே ஆசனத்திலிருந்து எழுந்தி ருந்தார். அந்த மனிதரும் ஆஸனத்தைத் தூக்கிப் பார்க்கப் பயப்பட்டான். உடனே ஸ்வாமிகள் அங்கு சிரித்துக் கொண்டே அந்த ஆஸனத்தை எடுத்ததும் அந்த ஸர்ப்பம் அங்கு காணப்பட வில்லை. எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். ஸ்வாமிகள் ஒன்றும் ஆச்சரியமில்லை. அந்த ஸர்ப்பம் இந்த வழியாகத் தான் மறுபடியும் போயிற்று, நீங்கள் மனம் லயப்பட்டு ச்ரவணம் செய்ததால் அதைக் கவனிக்கவில்லை என்றார். அதற்கு ஜனங்கள் தங்களுக்கு எப்பொழுதுமே பகவத் கதையில் இவ்வாறு மனம் லயிக்கும்படி அருள் புரியுமாறு வேண்டிக் கொண்டனர்.

இவ்வாறு பல கிராமங்களில் ஸஞ்சரித்து நூற்றுக்கணக்கான ஸப்தாஹ யக்ஞங்களை நடத்தி ஜனங்களிடம் பகவத் பக்தியை ப்ரசாரம் செய்து கொண்டே ஸ்வாமிகள் வார்திக்யத்தை அடைந்தார். லோகத்தாரைப் போல் குடும்பத் திற்கு உழைத்து வார்திக்யத்தை அடையவில்லை. லோகஸுகங்களை திக்காரம் பண்ணிவிட்ட ஸ்வாமிகள் பக்தி நிஷ்டையிலேயே தன் வயதைக் கழித்து விட்டார். கடைசிக் காலத்தில் ஸ்வாமிகளுக்குக் கண் தெரியவில்லை. எனவே சிஷ்யர்கள் சிகித்ஸைக்காக ஸ்வாமிகளை மஹாலிங்கய்யர் என்னும் டாக்டரிடம் அழைத்துச் சென்றனர். அந்த டாக்டர் முதலில் அலக்ஷியமாக ஸ்வாமிகளிடம் வந்தார். ஆனால் ஸ்வாமிகளைக் கண்ட அடுத்த கணம் இவர் தனக்கு அனுக்ரஹிக்கவே கண் ஆபரேஷன் என்னும் வ்யாஜத்தில் வந்திருக்கிறார் என்று உணர்ந்தார். ஆபரேஷன் மையத்தில் ஸ்வாமிகளுக்கு போதை மருந்து கொடுக்க டாக்டர் முன்வந்தார். ஆனால் ஸ்வாமிகள் போதையில்லாமலேயே சரீரத்தை மறக்க முடியுமென்றும் அப்படி சரீரம் மறந்ததும் அந்த சரீரத்தை ஸங்கோஜமில்லாமல் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலா மென்றும் சொல்லிவிட்டு அப்படியே சவாஸனம் போட்டு யோக நிலையில் சரீரத்தை மறந்து விட்டார். டாக்டர் மிகவும் பயபக்தியுடனும், ஆச்சர்யத்துடனும் சஸ்த்ர சிகித்ஸை செய்து இரு விழிகளையும் எடுத்து சுத்தம் செய்து மறுபடியும் ப்ரதிஷ்டை செய்து மருந்து போட்டுக் கட்டு கட்டுகிற வரையிலும் ஸ்வாமிகள் அசைவின்றிக் கிடந்தார். டாக்டருக்கு மிகவும் ஆச்சர்யமுண்டாகியது. இப்பேர்ப்பட்ட ஸத்புருஷர்களின் தேஹநிலை தங்களுடைய வைத்ய ஆராய்ச்சிக்குள் அடங்கி விடாது என்றும் தான் சிகித்ஸை செய்தது தன்னுடைய பரலோகத்திற்கு சிகித்ஸை என்றும் மஹான்களுக்கு வரக்கூடிய நோய் மஹான்களின் லீலையே என்றும் புரிந்து கொண்டார். ஸ்வாமிகளுக்கு ஊனக் கண் நன்றாகத் தெரியலாயிற்று. டாக்டருக்கும் ஞானக் கண் நன்றாகத் தெரியலாயிற்று.

இவ்வாறு பல ஊர்களில் ஸஞ்சரித்து வந்த ஸ்வாமிகள் தன்னுடைய நிர்யாண திதியை முன்னமே தெரிந்து கொண்டு முடிகொண்டான் என்னும் கிராமத்தை அடைந்தார். அங்குள்ள பாக்யவான்கள் ஸ்வாமிகளுக்குப் பல சுச்ருஷைகள் செய்தனர். யுவ வருஷம் வைகாசி மாதம் ந்ருஸிம்ம ஜயந்தி உத்ஸவத்தை வெகு விமரிசையாயக் கொண்டாட ஸ்வாமிகள் இஷ்டப்பட்டார். ஒவ்வொரு வருஷமும் ந்ருஸிம்ம ஜயந்தியை ஸ்வாமிகள் விசேஷமாகக் கொண்டாடுவது வழக்கம். இவ்வருஷம் அந்த ந்ருஸிம்ம ஜயந்தியை ஒட்டி ஸப்தாஹம் ஏற்பாடாயிற்று. ஸ்வாமிகள் அதி அத்புதமாக தனக்கே உரிய முறையில் பாகவத ப்ரவசனம் செய்தார். ஸ்ரீ ந்ருஸிம்ம ஜயந்தி தினம் மாலைப் பொழுது ஸ்ரீ ருக்மிணி கல்யாணம் முடிந்தது. அன்றுதான் ஸப்தாஹ பூர்த்தி. இரவு ஏகாதச ஸ்கந்தம் உபன்யாஸம் நடைபெற வேண்டும். ஆனால் ஸ்வாமிகள் மாலை உபன்யாஸம் முடிந்ததும் அன்று நரஸிம்ம ஜயந்தியானதால் ப்ரஹ்லாத சரித்ரம் ஸங்க்ரஹமாக உபன்யஸித்தார். ஸ்ரீ ந்ருஸிம்ம அவதாரத்திற்குப் பிறகு ப்ரஹ்லாதன் பகவானைத் துதிக்கும் கட்டத்தை மிகவும் உருக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்பேர்பட்ட பெருமையுடைய தாங்கள் தன்னுடைய ப்ரகாசத்தாலேயே கால ஸ்வரூபியாய் இருந்து கொண்டு ப்ரபஞ்சத்தை தனக்கு அதீனமாக்கிக் கொண்டு இந்த ப்ரக்ருதியால் வஞ்சிக்கப்படாத குணமுடையவராய் ஸ்வதந்த்ரராய் ப்ரகாசிக்கிறீர். அப்படியிருக்க இங்கு நான் மட்டும் ஸம்ஸார சக்ரத்தில் சுழலுகின்றவனாய்த் தவிக்கிறேன். ஹே நரஸிம்ம என் ப்ரபுவே என்னைத் தங்கள் திருவடிப் பக்கம் இழுத்துக் கொள்ளும் என்று



ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் லக்ஷார்ச்சனை

ப்ரஹ்லாதன் துதித்த ச்லோகம் வரவே, இந்தச் ச்லோகத்திற்கு ஸ்வாமிகள் வ்யாக்யானம் செய்து கொண்டிருக்கும் போதே ஸ்வாமிகளின் கபாலத்திலிருந்து ஜோதி ஸ்வரூபமான ஆத்மா பிரிந்தது. சில உத்தமாதிகாரிகளுக்கு மட்டும் அந்த ஜோதி தர்சனமாயிற்று. பரம பவித்ரமான ஸ்வாமிகளின் சரீரம் சன்யாஸ விதிப்படி அடக்கம் செய்யப்பட்டது. ஸ்ரீ ந்ருஸிம்ம பகவானுடன் கலந்த ஸ்வாமிகள் நமக்கு ந்ருஸிம்ம பக்தி உண்டாகும்படி அனுக்ரஹிக்கட்டும்.

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ம பரப்ரம்மணே நம:

ஸுபம்

